26th February 1966]

திருப்பத்தூர் பஞ்சாயத்துக் கூட்டு மன்றம்

* 125 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள பஞ்சாயத்து மன்றத்தில் மலேசியா நாட்டுக் குடியுரிமை பெற்ற ஒருவர் அங்கத்தினராக இருப்பது உண்மையா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இவ்விஷயத்தைப் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று கேட்கப்பட்டிருக்கிறது.

A report on the full facts of the case has been called for

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலுள்ள பஞ்சாயத்து மன்றத்தில் மலேசியா நாட்டுக் குடியுரிமை உள்ளவர் அங்கத்தினராக இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி விசாரணை நடத்தப்பட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது பற்றி சம்பந்தப்பட்ட கலெக்டரிடமிருந்து தகவல் கோரப்பட்டிருக்கிறது. தகவல் வந்ததும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தகவல் எப்போது கேட்கப்பட்டது ? விசாரணை செய்யப்பட்டு வருகிறதா ? அல்லது விவரமே அறியப்படும் நிலையில் இருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது சம்பந்தப்பட்ட முழு விவரத்தையும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கலெக்டரிடம் விவரமாக ரிப்போர்ட் அனுப்பும்படி கேட்டிருக்கிறது. அது வந்ததும் மேற்கொண்டு பதில் அளிக்கலாம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : கலெக்டரை முழுத் தகவல் அளிக்கும்படி எப்போது கேட்கப்பட்டது ? இது வரையில் தகவல் வரவில்லையே, அவர்கள் பதவிக் காலம் முடிவதற்குள் வந்து விடுமா, வந்து விடாதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எந்தத் தேதியில் கேட்கப்பட்டது என்ற விவரம் இல்லை. விரைவில் அனுப்பவேண்டுமென்று துரிதப்படுத்தி வருகிறோம்.

தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் சங்கம்

* 126 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உத்தியோக உயர்வு கோரி தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் சங்கம் அண்மையில் சர்க்காருக்கு விண்ணப்பம் ஏதேனும் அனுப்பியதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) கோரிக்கைகள் பரிசிலனை செய்யப்பட்டு, சங்கத்திற்குப் பதிலும் அனுப்பப்பட்டுள்ளது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்யும் பணியாளர்கள் என்னென்ன கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள்? என்னென்ன கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டன என்று அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கோரிக்கைகள் ஐந்து. (1) லோயர் டிவிஷன் கிளார்க்குகள், ஹெட் கிளார்க் ஆகியவர்களை பஞ்சாயத்து டெவலப்மென்ட் யூனிட் துறைகளில் சேர்க்க வேண்டும்; (2) பஞ்சாயத்து யூனியனிலுள்ள அட்டெண்டர்களை, ஐந்து வருஷ ஊழியம் செய்தவர்களை லோயர் டிவிஷன் கிளார்க்குகளாகப் பதவி உயர்வு செய்யவேண்டும்; (3) காஷியர், டைப்பிஸ்ட் ஆகியவர்களுக்கு லோயர் டிவிஷன் கிளார்க்குகளாகப் பதவி உயர்வு வேண்டும்; (4) ஹெட் கிளார்க்குகள், அப்பர் டிவிஷன் கிளார்க்குகள் ஆகியவர்களுக்கு பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகளாகப் பதவி உயர்வு வேண்டும்; (5) ஹெட் கிளார்க்குகளுக்கு எஜுகேஷன் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களாகப் பதவி உயர்வு வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளில் முதல் கோரிக்கைக்கு, ஏற்கனவே அவர்கள் பஞ்சாயத்து யூனியன் சர்வீசில் இருப்பதால், பஞ்சாயத்து டெவலப்மெண்ட் யூனிட்டுக்கு மாற்றுவதற்கு இப்போது உத்தேசம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

அட்டெண்டர் சம்மந்தப்பட்ட வரையில், ஜில்லா கலெக்டர் மூலமாக அவ்வப்போது வந்தால் பரிசிலனை செய்து, க்வாலிபிகேஷன், தகுதி பெற்றிருந்தால், பதவி உயர்வு தனித் தனியாகப் பரிசிலிக்கப்பட்டு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

காஷியர் சம்பந்தப்பட்ட வரையில் வெளியிடப்பட்டுள்ள பஞ்சாயத்து விதிகளின்படி அவர்கள் எல்.டி.சி. யாக பதவி உயர்வு பெறலாம் என்றும், டைப்பிஸ்ட் சம்பந்தப்பட்ட வரையில் பரிசிலனையில் இருக்கிறது என்றும் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஹெட் கிளார்க்குகள், அப்பர் டிவிஷன் கிளார்க்குகள், எக்ஸ்டென்ஷன் ஆபீசர் (பஞ்சாயத்து) ஆக பதவி உயர்வு பெறுவது பற்றியும், ஹெட் கிளார்க்குகள் எஜுகேஷனல் எக்ஸ்டென்ஷன் ஆபீசராகப் பதவி உயர்வு பெறவேண்டுமென்பது பற்றியும், அவர்கள் பர்ஸ்ட் கிரேட் எக்சிகூட்டிவ் ஆபீசராகப் பணியாற்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், அவர்கள் தாங்களாகவே சேர்ந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழ் நாட்டில் பஞ்சாயத்துக் கூட்டுறவு மன்றங்களில் பணி புரிகிற அலுவலர்களோடு பழைய மாவட்ட மன்றங்களில் பணிபுரிந்த ஊழியர்களையும் சேர்த்துக்

கொள்ள வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் தற்சமயம் இருந்தாலும் கூட, இதற்கு முன்பிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மூலக் கேள்வியிலிருந்து இந்த உப கேள்வி எழாது என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்யக்கூடியவர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் அதே சம்பளம் பஞ்சப்படி போன்ற சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பஞ்சாயத்து யூனியன் சர்வீஸ் என்பது வேறு. பஞ்சாயத்து யூனியன் சர்வீஸில் சேர்க்கப்பட்டவர்கள் சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அப்பாயின்ட்மென்டுகள் செய்யவேண்டும், அதற்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[Note:—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Members.]

II.—REQUEST FOR SUPPLY OF FULL INFORMATION DURING QUESTION HOUR.

திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, கேள்விகளுக்குப் பதில்கள் கூறப்படுகிற நேரத்தில் பொதுவாக அமைச்சர்களின் பதில்களில் மிகையானவையாகக் காணப்படுகின்ற வார்த்தைகள் 'தனிக் கேள்வி போடவேண்டும், விவரங்கள் இல்லை' என்பவைதான். உதாரணமாக, பாம்பூர் கூட்டுறவு நாணய சங்கத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியில் புகார் அல்லது கையாடல் இதைப்பற்றி அடிப்படைக் கேள்வியாகும். அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது சி.எல்.ஆர். நியமிக்கப்பட்டார் ஆராய்வதற்காக என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறினார். ஆனால், புகார் பற்றிய விவரம் கிடையாது என்று கூறினார். புகார் பற்றிய விவரம் தெரியாமல் உறுப்பினர்கள் அடுத்துக் கேள்விகள் போடமுடியவில்லை. கேள்வியில் புகார் பற்றிய விவரம் தரவேண்டும் என்ற அத்தியாவசியம் இருந்த போதிலும், அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிக்காததால் ஒரு அவல நிலை ஏற்பட்டது பற்றி வருந்துகிறேன். இந்த நிலை மாறுவதற்கு வேண்டிய உத்தரவை கனம் சபாநாயகர் அவர்கள் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கேள்விகளுக்கு விடைகள் அளிப்பதில் அரசாங்கம் இயன்ற அளவுக்குத் தகவல்கள் சேகரித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கூறக்கூடுமோ அவ்வளவுதான் கூற முடியும். கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேண்டுவதையெல்லாம் கூறவேண்டும் என்று வற்புறுத்துவது முறையல்ல. அவ்வாறு வற்புறுத்தவேண்டும் என்று தங்களைக்